## முதன்மை சார்பு நீதிமன்றம், திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம்

## அசல் வழக்கு எண்.37/2026

2026–ம் ஆண்டு **ஜீலை மாதம் 10–ம் தேதி** வாதி தரப்பு சாட்சி **வா.சா.1–ன்** வாக்குமூலம் 1989ம் ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி திரு.எம்.ராமச்சந்திரன், பி.காம்.,பி.எல்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஆனந்தராஜ் | வா.சா | 1 |
| த/க/பெயர் | வேலாயுதம் | தொழில் | கிளை மேலாளர் |
| கிராமம் | வெண்ணந்தூர் | வட்டம் | ராசிபுரம் |
| வயது | 35 | நாள் | 10.07.2026 |

**முதல் விசாரணை:–**

நான் இந்த வழக்கின் வாதி வங்கியின் கிளை மேலாளர் ஆவேன். நான் இந்த வழக்கில் என்னுடைய நிரூபண பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விபரங்கள் தெரியும், அதிலுள்ள கையெழுத்து என்னுடையதாகும். எனது நிரூபண வாக்குமூலத்தை முதல் விசாரணையாக ஏற்று, அதில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை முறையே கீழ்கண்டவாறு குறியீடு செய்து, வழக்குரையில் கோரியுள்ளவாறு பரிகாரம் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

1) 06.03.2019 தேதியிட்ட பொது அதிகார ஆவணம் உண்மை நகல் **வா.த.சா.ஆ.1 ஆகவும்,**

2) 07.01.2014 தேதியிட்ட கல்விக்கடன் விண்ணப்பம் அசல் **வா.த.சா.ஆ. 2 ஆகவும்,**

3) 07.01.2014 தேதியிட்ட கடன் அனுமதி கடிதம் அசல் **வா.த.சா.ஆ.3 ஆகவும்,**

4) 07.01.2014 தேதியிட்ட கல்விக்கடன் ஒப்பந்த படிவம் அசல் **வா.த.சா.ஆ.4 ஆகவும்,**

5) 08.04.2019 தேதியிட்ட கடன் ஒப்புகை கடிதம் அசல் **வா.த.சா.ஆ.5 ஆகவும்,**

6) 30.03.2022 தேதியிட்ட கடன் ஒப்புகை படிவம் **வா.த.சா.ஆ.6 ஆகவும்,**

7) 20.11.2024 தேதியிட்ட கடன் ஒப்புதல் படிவம் **வா.த.சா.ஆ.7 ஆகவும்,**

8) 29.11.2025 தேதியிட்ட பிரதிவாதியின் கடன் வரவு செலவு கணக்கு விவரங்கள் **வா.த.சா.ஆ.8 ஆகவும்,**

9) 11.12.2025 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் **வா.த.சா.ஆ.9 ஆகவும்,**

10) 15.12.2025 தேதியிட்ட பிரதிவாதி வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டை **வா.த.சா.ஆ.10 ஆகவும்,**

11) 15.12.2025 தேதியிட்ட பிரதிவாதியின் தகப்பனார் வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொள்ளாமல் திருப்பப்பட்ட அஞ்சல் உறை **வா.த.சா.ஆ.11 ஆகவும்,**

12) பிரதிவாதியின் தந்தை விஜயகுமார் என்பவரின் குடும்ப அட்டை நகல் **வா.த.சா.ஆ.12 ஆகவும்,** ஆகியவற்றை குறியீடு செய்து கொண்டு தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

Sd/-M.Ramachandran

| |
|---|
| Taken down before / by me in the open court and read over / interpreted to the witness and acknolwedged by him / her to be correct. |
| Sd/.M.Ramachandran,<br>Principal Subordinate Judge, Tiruchengode. |